புதுவை தி. மு. க. தோழர்கள் கைது

REGD. No: M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆனிமீ 8உ செவ்வாய் (22—6—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆனிமீ 9உ புதன் (23—6—54)	இதழ்: 7

பிரான்சின் அடக்குமுறை வலுக்கிறது!

மக்கள் தலைவர்கள் பலர் சிறைக்குள்!

(தந்திச் செய்தி)

புதுச்சேரி, ஜூன் 21—

பிரெஞ்சிந்தியப் போலீசார், புதுச்சேரியில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் 12 பேரைக் கைது செய்துள்ளனர்.

★

பலர் கைது

ஐந்து வாரங்களுக்குப் பிறகு மீண்டும் புதுச்சேரியில் இணைப்பு ஆதரிப்பு ஊர்வலம் நடைபெற்றது. இந்தியக் கொடிகளுடன் பேரிணே தெருவில் ஊர்வலம் வந்த ஆறு தோழர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களைப் பின்தொடர்ந்து வந்த மக்கள் கலைக்கப்பட்டனர்.

காரைக்காலில் ஐவர் இளைஞர் கழகத்தினர் ஐவர் நடத்திய ஊர்வலம் கலைக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர். புதுச்சேரியில் இருக்கும் பிரெஞ்சுத் துருப்புகள் உடனே வாபஸ் பெறப்பட வேண்டுமென்று அவர்கள் கோரினர் என்று தெரிகிறது.

இன்னொரு மாலை காரைக்கால் ஐக்கிய இளைஞர் கழக உதவிச் செயலாளர் அம்பிகா சுந்தரமூர்த்தி, காரைக்கால் முன்னேற்ற தேசிய இளைஞர்கள் கழகச் செயலாளர் வெ. சுப்பிரமணியம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

திருவட்டக்குடி சொம்பூரில் போலீசார் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மக்களைப் பயமுறுத்தினர் என்று தெரிகிறது.

திருவட்டக்குடியில் என். கே. சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பல இயக்கங்களைச் சேர்ந்த தோழர்கள் புதுச்சேரியில் துருப்புகளை இறக்குவதைக் கண்டித்தும், இச்செய்கை பிரெஞ்சிந்திய பற்றி இந்திய—பிரான்ஸ் இடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகளைப் பாதிக்குமென்றும் சொற்பொழிவாற்றினர்.

அகழிகள்

புதுச்சேரி—விழுப்புரம் சாலையில் வில்லியனூருக்கு அருகே பிரெஞ்சு எல்லை ஓரத்தில் அகழிகள் வெட்டப்படுகின்றன — தொடர்ந்து பல இடங்களில் இம்மாதிரி அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

பிரெஞ்சிந்தியப் போலீஸ் ஸ்டேஷன்களில் மிஷின் துப்பாக்கிகளும், வயர்லெஸ் செட்டுகளும் அமைக்கப்படுகின்றன. இந்திய எல்லையை ஒட்டி பல புதிய ஸ்டேஷன்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

பதவி பாதுகாப்பு மாநாடு!

எதிர்ப்புணர்ச்சி கண்டு கோபம்!

பூவராகன் எம்.பி. கண்டனம்

காமராசருக்கு பட்டை நாமம்

திட்டம் இல்லை! தீ பறந்தது!!

திண்டிவனத்தில் மந்திரி ராமசாமியார் நடத்திக் காட்டிய மாநாடு, வன்னிய மக்களின் மனக் கொதிப்பையும் மாற்றவில்லை! காங்கிரஸ் கட்சிக்கும் களிப்பூட்டவில்லை!!

தோழர்கள் கோபால கவுண்டர் எம். எல். ஏ., திருக்குறளார் எம். பி., ஆகியோரின் முயற்சியால் அதே திண்டிவனத்தில், சென்ற கிழமை நடைபெற்ற வன்னியப் பெரியார்களின் கூட்டமும், பொதுக் கூட்டமும் வன்னிய மக்களிடையே நல்லதோர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருந்ததால், மந்திரி கூட்டிய மாநாட்டுக்கு, எதிர்பார்த்த ஆதரவு கிட்டவில்லை.

திண்டிவனத்தில் பல பகுதிகளில், எதிர்ப்பு வாசகங்கள் தீட்டப்பட்டும், கருப்புத் துண்டுகள் கட்டப்பட்டும் இருந்தன.

பொதுச் செயலாளரின் ஆணைக்கு இணங்கி, தி. மு. க. தோழர்கள் எதிர்ப்புக் காட்டுவதில் கலந்து கொள்ளவில்லை. வன்னிய சமூகத்தினரே எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நிலை, மந்திரியாருக்குக் கோபம் மூண்டிடச் செய்தது—கோபத்தைக் காட்டிக் கொள்ள, தி. மு. கழகத்தின் மீது பாய்ந்தார்.

மந்திரியாரின் போக்காலும், பேச்சாலும், மாநாட்டுக்கு வந்திருந்த வன்னியப் பிரமுகர்களிலேயே பலருக்கு அருவருப்பு ஏற்பட்டது.

மந்திரி மாணிக்கவேலருக்கு அழைப்பு அனுப்பியிருந்தும், அவர், மாநாட்டுக்கு வரவில்லை.

நான் மந்திரியானபோது, 'குலத்துரோகம் - காட்டிக் கொடுப்பது' என்று பேசின ராமசாமி கோஷ்டியாரிடம் எனக்கு என்ன வேலை!—என்று அவர் கூறிவிட்டாராம்!

மாநாட்டில், உள்ளே இருந்ததைவிட, கொட்டகைக்கு வெளியே, பெருந்திரளான மக்களாம்!

எந்தப் பக்கமிருந்தேனும் எதிர்ப்பு கிளம்புமோ என்ற சந்தேகத்தால் எல்லாப் பக்கத்திலும் சரியான போலீஸ் காவல் இருந்ததாம்.

இருதயம் படைத்தவர்களெல்லாம், "அன்று, தி. மு. கழகத்தின் கூட்டுறவை பெரிதும் மதித்து நடந்த மந்திரியார், இன்று, அந்தக் கழகத்தை இவ்வளவு கடுமையாக கண்டிப்பது துளியும் நியாயமில்லை"—என்றுதான் கூறினராம்.

எனினும், கனம் ராமசாமி, "கங்கணம் கட்டிக் கொண்டேன்—கழகத்தை ஒழித்துக் கட்டிவிடுவேன்" என்று கர்ஜனை செய்தாராம்.

"என்னிடம் அந்த வேலையைக் கொடுங்கள்; செய்து முடிக்கிறேன்"—என்று வீர உரையாற்றினாராம விநாயகம் எம். எல். ஏ.

தலைமை வகித்த தோழர் சம்பந்தம் அவர்களும் தி. மு. கழகத்தின் மீது தாக்குதலை நடத்திக் காட்டித் திருப்தி அடைந்தாராம்.

ஒருவராவது, ராமசாமியார் மந்திரியானதால், வன்னிய மக்களுக்கு இன்னவிதமான நன்மை கிடைக்கும் என்று விளக்கிப் பேசவில்லை; அனைவரும், "அண்ணாத்துரையை அழித்து விடுவோம்; கோவிந்தசாமியை ஒழித்துவிடுவோம்; சுயர்தார்," என்று பேசினர்—உழைப்பாளர் கட்சியின் திட்டத்துக்கு மந்திரி பதவி எந்த வகையிலே உதவி செய்யும் என்று எடுத்துக் காட்டவில்லை; இயலவில்லை.

"தி. மு. கழகம், காமராஜர் மந்திரி சபையை ஆதரிக்கிறது; அப்படியிருக்க, ராமசாமியார் மந்திரியானதை மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்," என்று பேசப்பட்டதாம்!

காமராசர், ஆச்சாரியார் கல்வித் திட்டத்தை ஒழித்தார்; தி. மு. கழகம், அதற்காக அவரைப் பாராட்டிற்று; மந்திரி சபையை ஆதரிப்பதாக எப்போது கூறிற்று—என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

வன்னிய மக்களில் பெரும்பாலோர் தமது போக்கை எதிர்ப்பதை நன்முக உணர்ந்து கொண்ட ராமசாமியார், திராவிட சட்டசபைக் கட்சியினரை வேண்டிக் கேட்டுக் கொண்டு, மாநாட்டில் வந்திருந்து தன்னை ஆதரித்துப் பேசச் சொன்னாராம்!

இந்த வாய்ப்பை விட்டுவிடுவானேன் — என்று அவர்கள் சென்று, 'காங்கிரஸ்காரர்கள் கட்டாயப்படுத்தி, பதவி கொடுத்தார்கள்—ராமசாமி ஏற்றுக்கொண்டார்'—என்று பேசி, அதன் மூலம், தவறு செய்தது காங்கிரஸ் கட்சிதான் என்பதை இடித்துக் காட்டினார்களாம், இது ராமசாமியாரைக் காங்கிரஸ் மந்திரி சபையில் கொண்டு போய்ச் சேர்த்த காங்கிரஸ் தலைவர்களுக்கு, வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது.

மாநாட்டில், ராமசாமியார் மந்திரியானதற்காகப் பாராட்டுத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை!

ராமசாமியாருக்கு மந்திரிப் பதவி கொடுத்ததற்காக, காமராஜ் மந்திரி சபையை பாராட்டித் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை!

காமராசர் மந்திரி சபையை ஆதரிப்பதாகத் தீர்மானம் இல்லை!

வன்னிய மக்கள், காங்கிரசை ஆதரிக்கவேண்டும் என்ற தீர்மானம் இல்லை!

வகுப்பு அடிப்படையில் இனி இயங்கக் கூடாது— "தேசிய" ததிலே கலந்துவிடவேண்டும் என்று தீர்மானம் இல்லை!

மாநாட்டிலே, பேசப்பட்டது அவ்வளவும், ராமசாமியார் ஆதரிப்பு—தி. மு. கழகத்திற்கு எதிர்ப்பு—இவ்வளவு தான்!

தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது—ஆனால், கனம் ராமசாமியார் திருச்சி கூட்டத்தில், அது இப்போது சாத்தியமில்லை,' என்று கூறிவிட்டிருக்கிறார்.

கனம் ராமசாமியார் இடம் பெற்றுள்ள மந்திரி சபை புகுத்தியிருக்கும் 'ஓட்டு' போடும் முறையை கனம் ராமசாமியாரின் ஆதரவாளர் நடத்திய மாநாட்டில், கண்டித்துத தீர்மானம் நிறைவேற்றினர்.

ஆக, மாநாடு, எந்த ஒரு குறிப்பிட்ட இலட்சியமோ, திட்டமோ தரவில்லை. மந்திரிக்கு ஆதரவு அளிக்கும் மகத்தான கைங்கரியத்தோடு, மாநாடு முடிந்தது.

"தி. மு. கழகத்தையும் ஒழித்துக் கட்டுவேன்— திராவிட நாடு பெறவும் போராடுவேன்"—என்று பேசினாராம், விநாயகனார்!

"தி. மு. கழகத்திற்கு, நகரங்களில்தான் செல்வாக்கு உண்டு, கிராமங்களிலே கிடையாது!"—என்பது விநாயகனாரின் பேச்சிலே ஒரு பகுதி!

"நானாக தி. மு. கழகத்தின் உதவியை நாடவில்லை; அவர்களே கேட்டு அனுப்பினார்கள்; நான் கையெழுத்துப் போட்டேன்; இப்போதும், திராவிட நாடு பெறப் பாடுபடுவேன்"—என்பது அவருடைய தெளிவுரையில் ஒரு பகுதியாகும்!

"திராவிட நாடாவது, கிடைப்பதாவது—ஆந்திரன் பிரிந்துவிட்டான்—கேரளத்தான் கேட்க மறுக்கிறான்"—என்பதும், விநாயகத்தின் விளக்க உரையிலே ஒரு பகுதி!!

(4-ம் பக்கம் பார்க்க)

நாடற்ற இந்தியர்

இலங்கைக்கு இந்தியா பதிலனுப்பிவிட்டது

நாடற்ற இந்தியர்களின் எதிர்காலம் பற்றி இலங்கை சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு தங்கள் கருத்து என்னவென்பதை இந்திய சர்க்கார் இலங்கை சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது என்று தெரிகிறது.

சென்னை சர்க்காரைக் கலந்தாலோசித்த பின்னரே இந்திய சர்க்கார் இலங்கைக்குத் தனது கருத்தை அனுப்பியது என்று தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22-6—54 செவ்வாய்

அறிவாற்றல் வேண்டும்!

''சமுதாய வாழ்வில் எழும் எரிச்சல்களும், கோபதாபங்களும், கிளர்ச்சிகளும் உடனுக்குடன் கவனிக்கப்பட வேண்டியவை; அவற்றை அடக்கி வைக்கப் பார்ப்பதால் இலாபமில்லை.''

நிதி மந்திரி தேஷ்முக் மதி மிகு கருத்துரையை அளித்திருக்கிறார்.

சமுதாய வாழ்வில், நிச்சயமாக எரிச்சல்களும், கோபதாபங்களும், கிளர்ச்சிகளும் உள்ளன; எவ்வளவு அலட்சிய புத்தியுடையவரும் உணரும் அளவிலும் வகையிலும் இவை இருக்கத்தான் செய்கின்றன.

ஏன் போட்டியும் பூசலும், பொறாமையும் பொச்சரிப்பும் மனத்தாங்கலும் மாச்சரியமும்—என்று சமரச போதனை கூறுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள்; அவர்கள் அடிக்கடி அறநெறி குறித்தும், அன்பு பற்றியும் அழகுற எடுத்துக் கூறித்தான் வருகிறார்கள்; எனினும் சமுதாய வாழ்விலே சாந்தியும் சமரசமும், நேசமும் பாசமும், தோழமையும், அரும்பக் காணோம்; அறிகுறியும் தெரியக் காணோம்.

''உலகமே மாயை; வாழ்வோ நீர்க் குமிழி; செல்வமோ நிலைக்காதது''—என்றெல்லாம் கூறிச் சென்ற கவிவாணர்களும், மதத் தலைவர்களும் அநேகர்; இன்றும் அடுக்கடுக்காக உள்ளன, இத்தகு இன்னுரை உள்ள ஏடுகள்! எனினும், தேஷ்முக் சுட்டிக் காட்டும் எரிச்சல் இருக்கத்தான் செய்கிறது.

''காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா''—என்ற தத்துவப் பாட்டிலிருந்து, ''தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்''—என்ற புரட்சிப் பாடல் வரையிலே, நாடு கேட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறது; எனினும், கோபதாபங்களை விடமுடியவில்லை! ஏன்? அந்தக் கோபதாபமும், எரிச்சலும், இயற்கையாக எழுகின்றன! உபதேசம் அவற்றைத் தடுத்திட இடமில்லை!

கடல் அலையை, காற்றை, நறுமணத்தை எங்ஙனம் தடுத்திடல் இயல்வதில்லையோ, அது போலவே இயற்கையாக எழும் உணர்ச்சிகளை, உள்ளம் உருகும் பாடலாலோ, உலகப் பெரியாரின் உபதேசத்தாலோ, நாடாளும் மன்னரின் சட்டத்தாலோ, தடுத்திட முடிவதில்லை.

சமுதாய அமைப்பு எங்ஙனம் இருக்கிறதோ, அதற்கேற்பவே, சமுதாயத்தின் எண்ண அலைகள் எழும்! அந்த எண்ண அலைகளைக் கண்டு அருவருப்படைவதோ, அச்சம் கொள்வதோ, அலட்சியப்படுத்துவதோ, அல்லது தேஷ்முக் குறிப்பிட்டபடி அடக்கப் பார்ப்பதோ பயன் தராது; நோய் போக்கும் மருந்து அது அல்ல!

சமுதாயத்தின் அமைப்பு முறை மாற்றப்பட்டாக வேண்டும்; கூரையின் ஓட்டை இருக்குமட்டும், மழை நீர் குடிசையைக் குளமாக்கித்தான் தீரும்; சுவற்றிலே வெடிப்புகள் இருக்குமட்டும் நச்சுப் பூச்சிகள் ஆங்கு பதுங்கிக் கிடந்து சமயம் கிடைக்கும்போது கேடு செய்யத்தான் செய்யும்!

சமுதாயத்தைச் செப்பனிட்டாக வேண்டும் என்ற பேருண்மையைக் காட்டவே, இந்த எரிச்சல்களும், கோபதாபங்களும் பயன்படுத்தப்பட வேண்டுமே யொழிய இப்படியும் கோபதாபம் இருக்கிறதே என்று ஆயாசப்படுவதில் பயனில்லை.

தாழ்நிலையும் தரித்திரமும் தேளெனக் கொட்டும்போது, துடித்துக் கிடப்பவனிடம், 'தேவ ரசம்' தருவதோ, 'தேசிய ரசம்' தருவதோ பலன் என்ன அளிக்கும்?

ஜாதி பேதமும், வர்க்க பேதமும் உள்ள மட்டும், மன எரிச்சலும், கோபதாபமும் எழத்தான் செய்யும்!

பாடுபடுபவனுடைய உழைப்பு பாடுபடாதவன் கொழுத்திடப் பயன்படுவது கண்டு, பாதாம் கலந்த பாயாசம் பருகியவன் போலவா, பாட்டாளிக்கு இனிப்பு ஏற்படும்—எரிச்சல் எழத்தானே செய்யும்!

சுரண்டிப் பிழைப்பவன் சுகபோகியாகி, ஆளவந்தார்களையும் துணைக்கு அழைத்து, அட்டகாசம் செய்யக் கண்டால், உழைத்து உருக்குலைந்தவனின் உள்ளம் பதறத்தானே செய்யும்—கோபம் கொப்பளிக்கத்தானே செய்யும்!

ஜாதியின் பெயரால், 'ஜாரட்சி' நடத்தும் 'சடங்குகளை'க் கண்டால், உழைத்து உழைத்து சக்கையாகிப் போனவனின் உள்ளம் எரிமலையாகத்தானே செய்யும்—கனல் கக்காது இருப்பானா?

சீறிவரும் நாகத்தையும், பாய்ந்துவரும் சிறுத்தையையும் கண்டதும், உடலின் பளபளப்பு பார்த்து உள்ளம் மகிழ வேண்டும்—என்று உபதேசம் செய்வார் உண்டோ?

தங்களைத் தாழ் நிலையில் தரித்திரத்தில் தள்ளிடும் முறை சமுதாயத்தில் இருப்பதையும், அதைக் கட்டிக் காத்திடுவோர் ஆளவந்தார்களாகி விட்டிருப்பதையும் காணும்போது, பாட்டாளி, கோபம் கொள்ளாமலிருக்க முடியுமா?

எனவேதான் சமுதாயத்திலே எரிச்சலும், கோபதாபமும் இருக்கிறது. தேஷ்முக் சொல்லுகிறபடி, அதனை அடக்கிடப் பார்ப்பது பலன் தராது.

அதுபோலவே இந்த எரிச்சலும் கோபதாபமும் வகுப்பு வாதிகள், பொது உடைமைக் கட்சியாரும் தூண்டிவிடுவது—என்று கருதுவதும், கூறுவதும் பலன் அளிக்கப் போவதில்லை.

சமுதாயத்திலே, எரிச்சலும் கோபதாபமும் எழா வண்ணம், சமூகம் செப்பனிடப்பட வேண்டும். தூய உள்ளம் வேண்டும் அதற்கு! துணிவு நிரம்ப வேண்டும்!!

பரிமள கந்தம் தெளித்த பட்டுத் துண்டினை முகர்ந்து கொண்டிருந்தால், பக்கத்திலுள்ள சாக்கடை நாற்றம் ஒழிந்துவிடாது; சாக்கடை தூர்க்கப்பட வேண்டும்—சமூகம் செப்பனிடப்பட வேண்டும். ஆற்றல் வேண்டும் அதற்கு! அறிவாற்றல் நிரம்ப வேண்டும்!!

அழைப்பு!

விவசாயசங்கத்தில் சேர்ந்து பணியாற்ற வருமாறு தோழர் மணலி கந்தசாமி, தி. மு. கழகப் பொதுச் செயலாளருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்—ஒரு சொற்பொழிவு மூலம்!!

பெரியார் ராமசாமி அவர்களையும் அழைத்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம், தனியாக 'விவசாய சங்கங்களை' அமைத்துக் கொண்டு பணியாற்றவில்லை—உழவர் பிரச்சினையை பொதுப் பிரச்சினையில் ஒரு முக்கியமான அங்கம் எனக் கொண்டு, இயன்ற அளவு பணியாற்றி வருகிறது.

இயன்ற அளவுதான்! ''எமதே பணி! பிறருடையதெல்லாம் பெரும் பிணி!''—என்று பேசி, பலம் திரட்டும் வகையிலே உள்ளதல்ல, தி. மு. கழகம். எனவே, இயன்ற அளவு என்றே கூறுகிறது.

தனி 'விவசாய சங்கம்' அமைத்திடாததால், தி. மு. கழகத்திற்கு அன்பர் மணலி அழைப்பு விடுத்திருக்கிறார் போலும் என்று வாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும் தனியாகவே திராவிட விவசாய சங்கங்களைப் பல்வேறு இடங்களிலும் அமைத்துப் பணியாற்றிக் கொண்டுவரும் பெரியாருக்கு அழைப்பு விடுப்பதன் மர்மம் என்ன என்பது விளங்கவில்லை.

அழைப்பு விடுவதன் மூலம் தி. க., தி. மு. க., உழவர் பிரச்சினையில் பணியாற்றுவதில்லை என்று வீண் பழி சுமத்துவதன்றி வேறென்ன பொருள் உண்டு, இந்த அழைப்புக்கு!

வேறோர் பொருள் இருக்கலாம்—ஆனால் அதைக் கூறிடின், கம்யூனிஸ்டு கட்சியினரின் கண்கள் சிவந்துவிடக் கூடும்—கோபத்தால்!

அவர்கள் மட்டும் பணியாற்றுவதால், விவசாயிப் பிரச்சினைக்குத் தக்க பரிகாரம் காண முடியவில்லை; எனவே, துணை தேவைப்படுகிறது; அதற்கே இந்த அழைப்பு—என்று பொருள் கொள்ளலாம்; ஆனால் கம்யூனிஸ்டுகள் இதை ஏற்க மறுப்பார்கள்!

காரணம் எதுவாயினும், நற்பணிக்காகத்தானே என்று எண்ணி, அழைப்பை ஏற்போம் என்றாலோ, சேர்ந்த பிறகு, 'கூட்டு மேடை'யில், 'தி. மு. க.-வுக்கு, கண்ணியமாக நடந்துகொள்ளத் தெரியவில்லை,' என்று குறை கூறும் போக்கு பிறக்கிறது.

கூடாதிருந்தால் கோபம்! கூடினாலோ அச்சம்!! என்ன விசித்திரம்! எவ்வளவு வேடிக்கை!!

ஏன், பாவம், இந்தக் குழப்பம் இவர்களுக்கு?

பாலார் மில்—பரிதாபம்!

—(:)—

ஒருவர் உயிர் ஊசலாடுகிறது

மூவர் நிலை மோசம் — விளைவு விபரீதமாகும்

(நமது நிருபர்)

மந்திரிமார்களின் சுற்றுப் பயணத்துக்கு, அளவில்லை! அதிலும் தொழில் சம்பந்தமான இலாகாவை நிர்வகிக்கும் அன்பர் பக்தவத்சலத்திற்கும், அவரைச் சுற்றியிருப்போருக்கும் இடையே நடந்துவரும் 'பேரங்களுக்கும்' அளவில்லை! ஆனால், அவருக்கு மிகத் தெரிந்ததும், நண்பர்கள் இருக்கும் இடமுமான சிற்றூர் ஒன்று சென்னைக்கு அருகாமையிலே இருக்கிறது.

வாலாஜாபாத் — அங்கு கடந்த பத்து நாட்களாக, நெஞ்சம் குமுறும் நிலை நீடித்து வருகிறது. 400 தொழிலாளர்கள், அடிப்படை உரிமைகளுக்காகக் கடந்த பத்து நாட்களாகப் போராடி வருகின்றனர்! ஆறு மாத காலமாக நிர்வாகிகளைப் பல முறை வேண்டியும், பயன் ஏற்படாத காரணத்தால், வேறு வழியின்றி அறப்போர் துவங்கியிருக்கிறார்கள்.

வேதனையில் வாடிய தொழிலாளிகளின் மனதில் வேலை பாய்ச்சுவதுபோல, எட்டு தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதே, அறப்போர் உடனடியாக எழுந்ததற்குள்ள காரணங்களில் ஒன்றாகும்.

நீக்கிய எண்மரையும் வேலையில் வைத்துக் கொள்! தொழில் மன்றத் தீர்ப்பை அமுல் நடத்து!!—என்ற முழக்கங்களுடன், 10 நாட்களாக, அறப்போர் நடைபெறுகிறது.

சங்கச் செயலாளர் தோழர் ஏ. எஸ். கோபாலகிருஷ்ணன் பத்து நாட்களாக பட்டினி கிடக்கிறார்—ஆலை வாயிலின் முன்பு!

தி. மு. கழகத் தொழிலாளத் தோழரான ஆர். திருநாவுக்கரசு, தோழர் ஏ. என். தேவன், தோழர் பி. கேசவலு ஆகியோரும் கடந்த ஏழு தினங்களாக, பட்டினி கிடக்கின்றனர்.

பத்து நாட்களுக்கு முன் ஆலைக்குள் நுழைந்த தொழிலாளர்கள் அனைவரும் இன்னும் வெளியே வரவில்லை; அங்கேயே கிடக்கின்றனர். மனைவி குடும்பம், இவைகளைப் பார்த்தே பத்து நாளாகி விட்டன!

இந்தப் பயங்கர நிலையைக் கண்டும் நிர்வாகிகள் மனம் இரங்கவில்லை.

வாலாஜாபாத் நகராண்மைக் கழகத் தலைவரும் தி. மு. கழகத் தோழருமான தணிகாசலம், கழகச் செயலாளர், தொழிற் சங்கச் செயலாளர், ஊர்ப் பெரியவர்கள் முதலியோர் நிர்வாகியைச் சந்தித்து எவ்வளவு எடுத்துச் சொல்லியும், மனம் இளகவில்லை. ஊரே கொந்தளிப்பு மயமாக இருக்கிறது! 400 குடும்பங்கள் கலங்குகின்றன! நாளோ, பத்து ஆகிவிட்டது! நிர்வாகியோ, மனம் இளகவில்லை! மாறாக, ஆலையை மூடி விடுவதாக'ப் பயமுறுத்துகிறார்!!

இவ்வளவு தூரம் நிலைமை மோசமாகியும், ஆலைக்குரியவரான மதுரை கருமுத்து தியாகராஜ செட்டியார், வந்து பார்க்கவில்லை; அதேபோல, அரசியலாரும் கவனம் எடுக்கவில்லை.

மிகமிக வருந்துகிறோம்! இந்நிலை தொடர்ந்தால், விளைவு, விபரீதமாகும்!!—எனவே, உடனடியாக தொழில் கமிஷனரை அனுப்பி, ஆவன செய்ய வேண்டும். ஆலையரசுக்கும், அவரது எடுபிடிகளுக்கும்! 'சலுகை' காட்டும் முறையில் நடந்தால், அரசு, பெரிய பழியைச் சுமக்க நேரும்! நிலைமை, அவ்வளவு மோசம்!

முதலாளிகளின் பிடியில் காங்கிரஸ் இருக்கிறது

நாடு நாசமடைவது பற்றி பி. சி. கோஷ்

பர்த்வான், ஜூன் 21—

''காங்கிரசானது, வகுப்பு வாதம், லஞ்சம், முதலாளித்துவம் ஆகியவைகளின் கூட்டுச் சேர்க்கையே,'' என்று மே. வங்க பிரஜா—சோஷலிஸ்டு கட்சிக் காரியதரிசி டாக்டர் பி. சி. கோஷ் கூறினார்.

''அரசியல் சுதந்திரம் நாட்டிற்கு கிடைத்த தென்றாலும், ஏழாண்டு காலமாக ஆட்சியில இருப்பவர்கள் எதையும் சாதிக்கவில்லை. இந்த ஆட்சியில பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாகின்றனர்; ஏழைகள் நாளுக்கு நாள் ஏழைகளாகிக் கொண்டே செல்கின்றனர்; காங்கிரசானது முதலாளிகளின் பிடியில் சிக்கியிருப்பதே அதன் காரணமாகும்''

என்று டாக்டர் கோஷ் மேலும் கூறினார்.

வருடத்தில் லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தியாகும் தொழிற்சாலை

ரூ. 4½ கோடி செலவில் உ. பி. சர்க்கார் முயற்சி

உத்தர பிரதேச அரசாங்கத்தின் மிகப் பெரிய தொழில் முயற்சியான, மீர்சாபூர் மாவட்டத்தில் ராபர்ட்ஸ்கஞ்சிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள 'சர்க்' எனும் இடத்தில ரூ 4½ கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிமெண்ட் தொழிற்சாலை இப்போது கட்டி முடிந்துவிட்டது. இன்னும் ஒரு மாதத்தில் சிமெண்ட் உற்பத்தி தொடங்கும் எனத் தெரிகிறது.

ஒரு வருடத்தில் லட்சம் டன் போர்ட்லண்ட் சிமெண்ட் அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும். தொழிற்சாலை தொடக்க விழா செப்டம்பரில் நடைபெறும் எனவும் அறியப்படுகிறது.

கழகச் செய்திகள்

பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்

6—6—54 மாலை 5 மணிக்கு தோழர் ஏ சுந்தரம் தலைமையில் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, மறைந்த தோழர்கள் மணப்பாறை குமாரவேல், திருச்சி என். சங்கரன், சென்னை வண்ணையம்பதி ராமசாமி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், குலக் கல்வித் திட்டத்தை ஒழித்த முதலமைச்சர் காமராசரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சந்தைபுதுப்பாளையம் தி. மு. கழகம்

8—6—54 மாலை கழகச் சார்பில் உறுப்பினர் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் துணைச் செயலாளர் தோழர் பி. எம். கண்ணன் தந்தையார் மறைவுக்கும், தோழர் குமாரவேல் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும், கழகத் திறப்புவிழாவை மாவட்ட மாநாட்டிற்குப் பின்னர் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

புஞ்சைத் தலையூர் தி. மு. கழகம்

13-6-54 இரவு 8-30 மணிக்கு தோழர் கே என். காசிமுத்து தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, 4-6-54-ல் முதலமைச்சர் காமராசர் மூலனூர் வருகை தந்ததை முன்னிட்டு, போலீஸ் இலாகாவினர், தி. மு. கழகக் கொடியை கம்பத்துடன் எடுத்து விட்டதைக் கண்டித்ததுடன், கிளர்ச்சி பற்றி முதலமைச்சரிடம் மனுக் கொடுத்ததற்கு எந்தவிதமான சமாதானமும் சொல்லாது போய்விட்டது கண்டு வருத்தியும், மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

சோழன்பேட்டை தி. மு. கழகம்

13—6—54 இரவு 8 மணிக்கு மாயூரம் வட்டம் சோழன்பேட்டை திமுக அமைப்புக் கூட்டம் தோழர் என் சிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

ஏ. விஸ்வநாதன்: செயலாளர்; ஆர். செங்கோல்நாதன்: துணைச் செயலாளர்; ஏ மணி: பொருளாளர்; எம். குஞ்சு: மாவட்ட பிரதிநிதி; செயற்குழு உறுப்பினர்கள்: கிருஷ்ணமூர்த்தி, ராமையா, இருதயசாமி, ஏ. குழந்தைசாமி எஸ். முத்தையன், ராஜமணிக்கம், ராஜரெத்தினம், என். நாகராஜன், மாரிமுத்து, சம்பந்தம், ராமச்சந்திரன் சிங்காரவேல், கலியபெருமாள், என் ஆர் கலியபெருமாள், வீரமணி, கந்தசாமி

பரமக்குடி தி. மு. கழகம்

15—6—54 இரவு 10 மணியளவுக்கு தோழர் பி. அன்வர்மதியன் தலைமையில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, செயலாளர்: இரா. அ. பரமசிவத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு குழுவில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அவரை செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன், தோழர்கள் குமாரவேல், என். பாலசுந்தரம், திருச்சி சங்கரன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

சல்லிபட்டி தி. மு. கழகம்

30—5—54-ல் கழக செயற்குழு கூட்டம் தோழர் ப. நாராயணன் தலைமையில் நடைபெற்றபோது, வட்டாரக் குழு அமைக்கப்பட்டது:—செயலாளர்: சி. இராமநாதன்; துணைச் செயலாளர்கள்: வெ. காளியப்பன், பாபுசாமி; பொருளாளர்: பழனியப்பன்; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். பழனியப்பன், இருட்டிணசாமி, மாரியப்பன், கணபதி, சோ கோபால், வெங்கிடசாமி, சுந்தரராசன், தி. விசுவநாதன், கச்சிமுத்து, உமையை கவுண்டர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முடிவில் பல முக்கிய தீர்மானங்கள் செய்யப்பட்டன.

மாயூரம் தி. மா. மு. க.

8—6—54 மாலை 6 மணிக்கு மாயூரம் நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதலாவது ஆண்டு விழா தோழர் மீனாட்சிசுந்தரம் தலைமையில் நகரப் பூங்காவில் நடைபெற்றது. தோழர்கள் கருணாநிதி என். என். இளங்கோ, எஸ் எஸ். ராஜேந்திரன், என். சிட்டப்பா ஆகியோர் மாணவர்களின் கடமை குறித்துப் பேசினர். தோழர் கிர்பாலன் ஆண்டு அறிக்கை படித்தார்.

செம்பியம் தி. மு. க.

13—6—54 காலை 10-30 மணிக்கு தி. மு கழகச் சார்பில், செயலாளர் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் வி என். கலைச்செல்வி, ஜே. ஆர். பாரதி ஆகியோர் மறைந்த க. சண்முகம் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர். பின்னர் கழகச் சார்பில் அன்னார் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பள்ளிக்கொண்டை தி. மு. கழகம்

14—6—54ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வேலையின்றித் தவிக்கும் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு உடனடியாக உதவி தரவேண்டுமென சர்க்காரைக் கோரி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எலந்தங்குடி தி. மு. க.

13—6—54 மாலை திருவாரூர் சொ அ. முத்துராமன் தலைமையில் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் எம். எஸ் ராஜன் கழகத்தின் கொள்கைகளையும், சட்ட திட்டங்களையும் கழகத் தோழர்கள் நடந்து கொள்ளவேண்டிய விதிமுறைகளையும் விளக்கிப் பேசிய பின்னர், கடந்த ஆண்டுக் கணக்கு வரவு—செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் தோழர்கள் எஸ். ஏ மிக்ஜேலி செயலாளராகவும், ஏ. என் கோவிந்தராசு துணைச் செயலாளராகவும், எம் ஏ முத்தலீப், எஸ். எம். யாசின் பொருளாளர்களாகவும், டாக்டர் எம். எஸ். ராசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், ஜி சாரங்கபாணி, கே. மாரிமுத்து, சி. சந்திரசேகரன், சி. சீனிவாசன், எம். ராமு, பி உபைது, எம். சுப்பையா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெஞ்சமடை தி. மு. க.

13—6—54 மாலை கழகக் கட்டிடத்தில், கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஆ காளிமுத்து; துணைச் செயலாளர்: விசுவநாதன்; பொருளாளர்: எஸ். கலிக்கன்; மாவட்டப் பிரதிநிதி: இரா. நாராயணன், செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விருத்தாசலம் வட்ட தி. மு. க. செயற்குழு

4—6—54ல், கழகச் செயற்குழு கூட்டம் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றபோது, ஒவ்வொரு கிளையும் வட்ட கழகத்திற்கு ஆண்டு சந்தா ரூ 3 உடனடியாக கொடுத்துவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதுடன், அமைச்சர் எஸ். எஸ். ராமசாமியின் போக்கைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி. மு. க. அனுதாபிகள் கூட்டம்

7-6-54 மாலை 3-மணிக்கு ஆற்காட்டில் புலவர்மணிசாமியின் இல்லத்தில், தோழர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. ஆற்காடு வட்டாரத்திற்கு தி. மு. கழக பிரச்சாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இப்பிரச்சாரக் குழுவைப் பார்வையிட மாவட்டச் செயலாளரை அழைக்க முடிவு செய்யப்பட்டது.

திருப்பூர் தி. மா. மு. க.

13—6—54 மாலை 4 மணிக்கு தோழர் கொங்குச்செல்வன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, கழகத்தின் மூன்றும் ஆண்டு விழாவை ஆகஸ்டு மாதத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

திராவிடர் மன்றம்

சென்னை மூலகொத்தளம் (7-வது வட்டம்) பெரியபாளையத்தம்மன் கோவில் வீதியில் தோழர்கள் முருகேசனை தலைவராகவும், க. ஜெபசீலனை செயலாளராகவும் கொண்டு 10—6—54ல் திராவிடர் மன்றம் திறக்கப்பட்டது. மன்றத்திற்காக பி ஆர் டி. மாட்சாமை நாடக பயிற்சியாளராகக் கொண்டு, "வாழ்வில் நாம்" என்ற நாடகத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

பத்திரிகை ஆசிரியருக்கு தண்டனை

அச்சகம் பறிமுதல்

நாகுவலாம், ஜூன் 21— 'அல்பலாக்' என்னும் சான்சிபார் உருதுப் பத்திரிகையின் ஆசிரியருக்கு 555 டாலர்கள் அபராதம் கட்டத் தவறினால் ஆறு மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

'கென்யா, மலேயாவில் இரத்த வெள்ளம்' என்ற தலைப்பில் செய்தியைப் பிரசுரித்தது அவதூறாக எழுதினார்கள் என்று ஆசிரியர் அமது நாசர் லாம்டு என்பவர் மீதும், உதவி ஆசிரியர்கள் எட்டுபேர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டது. மற்றவர்கள் கோர்ட் செலவுக்காக 25 டாலர் கட்டவேண்டுமென்றும், இரண்டாண்டு காலத்திற்கு ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டு மென்றும் உத்தரவிடப்பட்டது.

பத்திரிகை அச்சகம் பறிமுதல் செய்யப்பட்டது.

திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம்

12—6—54 சனி இரவு 8 மணியளவில் சென்னை புதுப்பேட்டையிலுள்ள மேற்படி கழக உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: என். சுந்தரம்; துணைச் செயலாளர். கே. நரசிம்மன்; பொருளாளர்: பி. கே. கணேசன்; செயற்குழு உறுப்பினர்களாக 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அறிவழகன் ஆண்டு நிறைவு

மதுரையை அடுத்த மேலமடையில் 11—6—54 காலை 8 மணியளவில் தோழியர் மீரா அவர்கள் புதல்வனின் ஓராண்டு நிறைவு விழாவும், பெயரிட்டு விழாவும் மதுரை தோழர் என். முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் குழந்தைக்கு "அறிவழகன்" என்ற பெயர் சூட்டி சிறப்புரையாற்றினார்.

* * *

நல்லுசாமி — வைரமணி வாழ்க்கை ஒப்பந்தம்

காலை 10 மணியளவில் தோழியர் மீரா அவர்களின் இளவல் தோழர் நல்லுசாமிக்கும்— தோழியர் வைரமணிக்கும் நடந்த சீர்திருத்தத் திருமணத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'புதுமைத் திருமணம்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றி மணமக்களை வாழ்த்தினார்.

பாராட்டும்—பரிசும்

30—5—54ல், 70 மணிநேரம் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்தவரும், 11-6-54ல் நகர் பல்லவன்குளத்தில் மூன்று மணி நேரம் தண்ணீரின்மேல் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்தவருமான தோழர் என் செம்பாரத்திற்கு 11-6-54ல் முத்தமிழ் நாடகமன்றத்தாரால் ஒரு பாராட்டுக் கூட்டம் டாக்டர் கே. எம். ஏ. சத்தார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் செம்பாரத்தைப் பாராட்டிப் பேசியதோடு வெள்ளிக்கோப்பைகளும், பதக்கங்களும் பரிசாக வழங்கினர்.

அனுதாபம்

4—6—54ல், செல்லப்பம்பட்டி தி மு கழக துணைச் செயலாளர் தோழர் இளங்கோ அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் கஸ்தூரி அம்மாள் இயற்கை எய்தியமைக் குறித்து செல்லப்பம்பட்டி தி. மு. கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.—மேலது அனுதாபம் உரித்தாகுக. (ஜூர்.)

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக 2-வது

சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

ஜூன் மாதம் 26, 27-ந் தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷனுக்கு எதிரில் அமைத்துள்ள அழகிரி பந்தலில் — முத்து அரங்கில் நடைபெறும்

26—6—54 சனி:	27—6—54 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: ஈழத்து அடிகள்	தலைவர்: கே. ஏ. மதியழகன்
திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர்: நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், ஏ. வி. பி ஆசைத்தம்பி, க. அன்பழகன், அரங்கண்ணல்; ப. உ. சண்முகம், என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன், என். வி. நடராசன், கண்ணதாசன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., இரெ. இளம்வழுதி, எம். எஸ். ராமசாமி, தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே. சாமி, இரா. சு. தங்கப்பழம், நடராசன், சிவசாமி, ரத்தினம், நடிகர்கள் எம். ஜி, ராமச்சந்திரன், கே ஆர். ராமசாமி, தோழியர்கள் சத்தியவாணிமுத்து, அருண்மொழி, பூங்கோதை மற்றும் திராவிட சட்ட சபை எம். எல். ஏ -க்களும், பல இயக்கத் தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

★

இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

'அம்மையப்பன்,' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்

வ. கு. தலைவர்கள்: எம். பி. சாரதி, எம். சி. ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

செயலாளர்கள்: போளூர் கே. சுப்ரமணியம், வி. ஆ. ஆதிமூலம்

பொருளாளர்: வி. எஸ். அரங்கநாதன்

தொ. ப. தலைவர்கள்: அ. கருத்தோவியன், எல். குப்புசாமி

விளம்பர உறுப்பினர்: சிவானந்தம்

அலுவலக பொறுப்பாளர்: ஆ. இராதாகிருஷ்ணன்

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரு. 5, 3, 2, 1; பெண்களுக்கு அணா 8

பதவி பாதுகாப்பு மாநாடு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"நான் இன்னமும், திராவிட நாடு என்பதைப் பற்றி நம்பிக்கை வைத்துள்ளேன்," என்றும், விநாயகம் பேசினாராம்!

"நான் புதுக் கல்வித் திட்டத்தை ஆதரித்தேன்; பிறகு புரிந்து கொண்டேன்; எதிர்த்தேன்"—என்றும் விநாயகம் பேசியிருக்கிறார்.

அவரேவா, இவ்வளவும் பேசினார்—என்று மாநாட்டுக்கு வராதவர்கள் ஆச்சரியப்படுவர். ஆமாம்! அவரேதான்! இவ்வளவையும்தான் இடி முழக்கம் போல!!

ஏன், இவ்வளவு குழப்பம்—முரண்பாடு—அவருடைய பேச்சிலே என்று கேட்கத் தோன்றும்; கோபம்!—அவ்வளவுதான்—வேறென்ன காரணம்!!

★

"எஸ். எஸ். இராமசாமி படையாட்சியார் மந்திரி பதவி ஏற்பதற்கு முன், பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரைக் கூட கலந்தாலோசிக்கவில்லை. எங்களை முக்கியமாகக் கலந்திருக்க வேண்டும்; அதுதான் போகட்டுமென்றால், மந்திரி பதவி ஏற்ற பிறகாவது, மந்திரி இராமசாமியோ, மற்ற முக்கிய பிரமுகர்களோ எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்;

"இராமசாமி படையாட்சியார் மந்திரியானது, பத்திரிகை மூலமாகத்தான் எங்களுக்குத் தெரிய வந்தது.

"இராமசாமி மந்திரியானவுடன், பத்திரிகை நிருபர்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு, 'உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டனர்; 'எங்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை; எங்கள் தொகுதி மக்களின் கருத்தைத் தெரிந்த பிறகுதான் அபிப்பிராயம் தெரிவிக்க முடியும்,' என்று நிருபரிடம் சொன்னேன்;

"ஒருவன், முன்பு ஏழையாக இருக்கலாம்; மற்றவன், நிழலின் ஆதரவில் நின்று வாழ்ந்திருக்கலாம்; ஆனால், அவன் உயரக் கூடாது; பெரிய பதவியை அடையக் கூடாது என்று கூறலாமா?—இம்மாதிரி, அதுவும் பொறுப்புவாய்ந்த தலைவர் (எஸ். எஸ். ராமசாமி) கூறுவது கூடாது; அன்று ஏழையாய் இருந்தவர்கள், இன்று பணக்காரராக ஆவார்கள்! குறை கூறுவது கூடாது.

"எங்களைப் போன்ற முக்கியமானவர்களைக் கலந்து மந்திரிபதவி ஏற்காததைப்பற்றி நான் மிக மிக வருந்துகிறேன்; அங்கு (டெல்லியில்) தெரிவிக்கவில்லையென்றால், இங்குவந்த பிறகாவது, இதுவரையில் என்னைக் கேட்டதும் கிடையாது—என்பதை மறுமுறையும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்;

"மந்திரி அவர்கள் தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; கோயில் அர்ச்சகர்களாகவும், கிராம மணியக்காரர்களாகவும் உள்ளவர்களை, தீண்டப்படாதவர்களாகப் பார்த்து தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும்;

"மேலும் நம் இனம், பொருளாதாரத்தில் முன்னேற நீர்ப்பாசனத் திட்டத்தை அதிகப்படியாக ஏற்படுத்த வேண்டும்."

இதுபோலத் தமது கண்டனத்தைச் சோகத்துடன் தெரிவித்தார், பூவராகன் எம். பி.,—வன்னியர்தான்!!

அதிகம் பேசுவதற்கு அவருக்கு வாய்ப்பு இல்லை.

மற்றொரு எம். பி., திருக்குறளார், ராமசாமியாரின் போக்கை முன்பே கண்டித்துவிட்டார்.

மற்றோர் எம். பி., கோவிந்தசாமி கச்சிராயர், மாநாட்டுக்கு வரவில்லை!

எம். எல். சி., செஜபதி நாயகர் இதிலே கலந்து கொள்ளவில்லை.

காங்கிரஸ் மந்திரி சபையில் இடம் கொடுத்தால், ராமசாமியார், வன்னிய வகுப்பு சார்பாகப் பேசுவதை நிறுத்திக் கொள்வார்; வன்னிய மக்களைக் காங்கிரசில் சேர்த்து வைப்பார்; உழைப்பாளர் கட்சியைக் கலைத்து விடுவார்—என்றெல்லாம் நம்பினோம்; இப்போது காமராசருக்கு பட்டை நாமம் சாத்துகிறாரே. காங்கிரசில் சேரவில்லை, சேரவில்லை—வன்னியர் முன்னேற்றத்துக்காகவே மந்திரியானேன்—அதுவும் காமராசர் வற்புறுத்தியதால் மந்திரி வேலையை ஒப்புக் கொண்டேன்—என்று ராமசாமியார் பேசுகிறாரே; குல மாநாடு கூட்டி நடத்துகிறாரே; காங்கிரசை ஆதரித்தோ, காமராசரை ஆதரித்தோ ஒரு தீர்மானமும் போடக் காணோமே; இந்த நிலையில், அவருக்கு மந்திரி வேலை கொடுத்ததால், காங்கிரசுக்கு என்ன பலன், நன்மை—என்று, விஷயமறிந்த காங்கிரஸ் வட்டாரத்தில் பேசப்படுகிறது, விசாரத்துடன்!

கொஞ்சம் பொறுமையாக இருங்கள்—குல மக்கள் கோபமாக இருக்கிறார்கள்—அவர்களைக் காங்கிரசில் சேருங்கள்படி அவசரப்பட்டுச் சொன்னால் எதிர்ப்பு வெளிப்படையாகவே அதிகமாகி விடும்—என்று ராமசாமியார், சமாதானம் கூறுகிறாராம்!

இனி, ராமசாமியாரை நம்பிப் பயனில்லை—நமது கொள்கைக்கும் வளர்ச்சிக்கும் வேறு வழி தேட வேண்டியதுதான்—என்ற முடிவுடனேயே பலர் மாநாட்டிலிருந்து கிளம்பி, தோழர் கோபால கவுண்டர் எம். எல். ஏ., இல்லம் சென்று தமது கருத்தைக் கூறினாராம்.

புரட்சிக் கொடியை உயர்த்தி, கண்டன அறிக்கை விட்டு சட்ட சபையில் எதிர்க் கட்சியில் அமர்ந்து ராமசாமியாரின் போக்கை பகிரங்கமாகவே திண்டிவனம் பொதுக் கூட்டத்தில் கண்டித்துப் பேசிய தோழர் கோபால கவுண்டர் எம். எல். ஏ., மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, கண்டனத் தீர்மானமோ கொண்டுவருவதற்குக் கூட, மந்திரியாரின் மாநாட்டிலே, இடம் கிடைக்கவில்லை.

தன்னைச் சுற்றியும் சிலர் இருக்கிறார்கள்—துதி பாடவும் சிலர் முன்வருகிறார்கள்—என்பதை மட்டும் காமராசருக்கு எடுத்துக் காட்டி, கிடைத்த மந்திரி பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவே, இந்த மாநாடு நடைபெற்றிருக்கிறது!

உலக அரங்கில்

சியோல் :
தென்கொரிய அதிபர் சிங்மன்ரீயிடம், அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரின் கடிதம் ஒன்றை சியோலில் உள்ள அமெரிக்க தூதுவர் கொடுத்தார்.

★

நைரோபி :
கென்யாவில் 22 கலகக்காரர்களை சர்க்கார் தூக்கிலிட்டார்கள் என்று தெரிகிறது.

* * *

இந்தியால் நடத்தப்படும் 'டெய்லி குரானிகள்' பத்திரிகையின் ஆசிரியர் பி ஜி. பின்டோ என்பவரைக் கைது செய்தனர் என்று தெரிகிறது.

★

பான் :
அட்லாண்டிக் கடலை 40 மணி நேரத்தில் கடந்து செல்லும் ஜெட் சக்தியால் இயங்கும் கப்பல் ஒன்றை கட்டுவதற்கு விஞ்ஞானிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என்றும் ஜெர்மன் என்ஜினீயர் திட்டமிட்டிருக்கிறார்.

★

ஹாங்காங் :
சீன சர்க்கார் ஆறு மாகாணங்களின் ஆட்சியைத் தானே நேரடியாக எடுத்துக் கொண்டது.

★

டெஹ்ரான் :
பெர்சியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பிரிட்டனும் மற்ற நாடுகளும் உதவி செய்ய முடியுமென்று பிரதமர் சாஹேதி கூறினார்.

லண்டன் :
குவாடிமாலாவில் இராணுவங்களிடையே மோதுதல் ஏற்படலாம் என்று காமன்ஸ் சபையில் அட்லியின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் ஈடன் கூறினார்.

★

டோக்கியோ :
டோக்கியோ போலீசார் கடந்த இரண்டு நாட்களில் 10,784 திருடர்களையும், ஜேப்படிக்காரர்களையும் கைது செய்தனர். டோக்கியோ சிறைகளில் 3800 பேர்களைத்தான் அடைக்க முடியுமாதலால் போலீசார் என்ன செய்வதென்று தெரியாது திணறுகின்றனர்.

★

சிங்கப்பூர் :
ஆயுதம் தாங்கிய நான்கு சீனக் கொள்ளைக்காரர்கள் சிங்கப்பூர் துறைமுகத்தில் நுழைந்து இரண்டு போலீசாரைச் சுட்டுக் கொன்றனர்.

★

குவாடிமாலா :
கிளர்ச்சிப் படைகள் சகாப்பா நகருக்கு அருகே வந்துவிட்டன என்று அறிவிக்கப்படுகிறது. குவாடிமாலாவிலும் பீதி நிலவுகிறதாம்.

★

பாரிஸ் :
வியட்நாமின் முன்னாள் அரசர் பாவோடாய், தனது நாட்டின் முழு விடுதலைக்குள்ள தடைகளை நீக்குமாறு பாரிஸ் சர்க்காருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

கழகக் கூட்டங்கள்

★

அரண்மையப்பன்

23—6—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

கோழியூர்

திரு. வி. க. திடலில்

23—6—54 மாலை 6 மணிக்கு

தலைவர் : பி. லெட்சுமணன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

தோ, பிச்சமுத்து

தி. கோ. சிங்காரம்

சி. முனுசாமி

ம. பொன்னம்பலம்

★

கீட்டிமேடு

கடை வீதியில்

24—6—54 மாலை 4½ மணிக்கு

தலைவர்: வி. ஆர். எம். கல்தாஸ்

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

ரசாக்

சொற் பயிற்சிக் கூட்டம்

24—6—54 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழக இல்லத்தில், 'மறுமலர்ச்சி' எனும் பொருள் பற்றி தோழர் இளந்தென்றல் தலைமையில் நடைபெறும்.

சூ-என்-லாய் டில்லி வருவார்!

தனி விமானம் செல்கிறது!

வருகையின் நோக்கம் தெரியவில்லை

பம்பாய், ஜூன் 21—

சீனப் பிரதமரும், சீன வெளிநாட்டமைச்சருமான சூ-என்-லாய் ஜூன் 24-ந் தேதி யன்று புதுடில்லிக்கு வருவார் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தோ-சீனப் போர் நிறுத்தம் பற்றிய ஜினிவா மாநாட்டில் கலந்து கொண்டுள்ள சூ-என்-லாய், புதுடில்லியில் பண்டித நேருவுடன் கலந்து பேசுவார் என்று தெரிகிறது.

சூ-என்-லாயை ஜினிவாவிலிருந்து அழைத்து வர ஏர்-இந்தியா இன்டர் நேஷனல் கம்பெனியின் தனி விமானமொன்று அனுப்பப்பட்டிருக்கிறது.

சூ-என்-லாய், எவ்வளவு நாள் டில்லியில் தங்குவார் என்பதும், அவரது வருகையின் நோக்கம் என்னவென்பதும் சரியாகத் தெரியவில்லை.

திறப்பு விழா

24—6—54 மாலை 6 மணிக்கு 26, ஆலந்தூர் சுப்ரமணி ஆச்சாரி தெரு (குளிர் மில் அருகாமையில்) புது அ சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக திறப்பு விழா தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், புலவர் நன்னன், முகவை ஆர். எம். பாண்டியன், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

செய்திக்கதிர்

தேர்தல்
சென்னை முதல் அமைச்சர் கே. காமராசர் குடியாத்தம் தொகுதியில் சென்னை சட்டசபை உறுப்பினர் தேர்தலுக்குப் போட்டியிடுவார் என்று தெரிகிறது.

★

ஒத்திவைப்பு
பிரெஞ்சிந்திய நிலைமைகளில் திடீரென மாறுதல் ஏற்பட்டதால் இந்தியப் பிரதமர் நேரு தனது சிம்லா பிரயாணத்தை ஒத்திவைப்பார் என்று தெரிகிறது.

★

பஸ் போக்குவரத்து
பள்ளிக்கூடங்கள், கோர்ட்டுகள் திறக்கப்பட்ட பிறகு போக்குவரத்தில் ஏற்படக்கூடிய தொல்லையைச் சமாளிக்க சென்னை சர்க்கார் எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்வார்கள் என்று சென்னை போக்குவரத்து இலாகா அமைச்சர் கூறினார்.

★

மரணம்
பிரெஞ்சிந்திய இணைப்புத் தலைவர் குபேரின் மனைவியார் ஐமருநிசா மரணமடைந்தார் என்று தெரிகிறது. அவர் சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார் என்று தெரிகிறது.

★

சலுகை
'பாக்கிங்' செய்யப்பட்டோ, அல்லது உதிரியாகவோ உள்ள விற்பனை ஆகாத துணிகளை தம்மிடம் வைத்துக்கொண்டு டிசம்பர் 31-வரை விற்பனை செய்யும் வகையில் துணி வியாபாரிகளுக்குச் சலுகை அளித்து, ஜவுளி கட்டுப்பாட்டு உத்திரவை சர்க்கார் தளர்த்தியிருக்கின்றனர்.

★

கடன்
பிரிட்டனில் படித்துக் கொண்டிருக்கும் சோட்டா உதயபுரியின் அரசர் இந்திய தேசீயத் திட்டக் கடனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தந்திருக்கிறார்.

★

ஞாபகச் சின்னம்
கன்னியாகுமரியில் காந்தியாரின் ஞாபகார்த்தச் சின்னமொன்றுக்கு ஆச்சார்ய கிருபளானி அஸ்திவாரக் கல் நாட்டினார்.

★

கதா காலட்சேபம்
கிராமங்களில் கதா காலட்சேபம் செய்து பொது மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள பயிற்சி அளிக்க உத்தரப் பிரதேச சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

★

கொள்ளை
மாஸ்கியில், பகலில் மாவு மில் முதலாளியின் சங்கத்திலிருந்த 1,17,000 ரூபாயை ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் எடுத்துச் சென்றனர் என்று தெரிகிறது.

★

மக்கள் சபை
இந்திய மக்கள் சபை ஆகஸ்டு 23-ந் தேதியிலிருந்து செப்டம்பர் 30-ந் தேதி வரை நடைபெறுமென்று தெரிகிறது. தனிப்பட்ட உறுப்பினர்களின் அலுவல்களுக்காக 5 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழக[illegible] ஆக்கக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்[illegible] அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டு (இல. [illegible] காரணை செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.